



உதயம்.6 / கதிர்.01
Vol.6 / Issue.01

பூத்துறை மற்றும் பெரம்பையின் செய்தித்தாள்

January, February, 2013 / ரூ.1.00


## Republic Day Celebration in Poothurai High school



பூத்துறை, ஜனவரி 26: அரசு உயர்நிலைப்பள்ளி, பூத்துறையில் குடியரசு தினம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு ஊராட்சி மன்றத் தலைவர் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து, அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். தலைமையாசிரியர் திருமதி. சி.கௌரி அவர்கள் குடியரசு தினவிழா வாழ்த்துரையும், வரவேற்புரையும் வழங்கினார். நிகழ்ச்சியில் சர்வம் ஸ்ரீ அரபிந்தோ சொசைட்டி இயக்குநர் அவர்களும் மற்றும் ஊராட்சி மன்ற உறுப்பினர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தனர். பள்ளியின் ஆசிரிய, ஆசிரியைகள் மாணவர்களுக்கு போட்டிகள் நடத்தியும், கலைநிகழ்ச்சிகள் சிறப்புறவும் ஒத்துழைப்பு நல்கினர். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. ஊராட்சி மன்றத் தலைவர் அவர்கள் சென்ற ஆண்டு பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவிகள் D. விஜயபிரியதர்ஷினி, S. வனிதா, M. வித்யா ஆகியோருக்கு ரூ 5000/-, ரூ 3000/-, ரூ 2000/- என ஊக்கத்தொகை வழங்கிச் சிறப்பித்தார். மாணவர்களுக்கு இனிப்பு வழங்கி இறுதியில் நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது..

தலைமையாசிரியர்,
அரசு உயர் நிலைப்பள்ளி, பூத்துறை

## Women's upliftment with SARVAM



சர்வம் 2012 ஆம் ஆண்டில் சேமிப்புக் குழு மகளிருக்கு வருடத்தின் அனைத்து மாதங்களிலும் ஏதாவது ஒரு வகையில் கருத்துப் பட்டறை, மருத்துவ முகாம் அல்லது பயிற்சி முகாம் என 17-க்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தது.

மகளிரும் 2011 ஆம் ஆண்டை காட்டிலும் 2012 ஆண்டில் நிகழ்ச்சிகளில் பங்கேற்றவிதம் பாராட்டும்படி இருந்தது. சில மகளிர் முதன் முறையாக பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆர்வமுடனும், தைரியமுடனும் பங்கேற்றது பாராட்டுக்குரியது.

முதன் முறையாக வயதான மகளிரும் அனைத்து வகையான நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றது பாராட்டத்தக்கது. மேலும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளிலும் எவ்வித கிராம மற்றும் வயது போன்ற வேறுபாடுகள் இன்றி ஒற்றுமையுடன் கலந்து கொண்டது வரவேற்கதக்க வேண்டிய ஒன்றாகும்.

சேமிப்புக் குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவிகள் வாழ்வில் எல்லா வளமும் பெற்று சிறப்புடன் விளங்க சர்வத்தின் பிரார்த்தனைகள், வாழ்த்துகள்!


(மேலும் படங்கள் பக்கம் 2,4)...


## Loan disbursed by SARVAM for milch cows



பெரம்பை, டிசம்பர் 26: பெரம்பை ஊராட்சியில் உள்ள சேமிப்புக் குழு மகளிருக்குக் கறவை மாடு வாங்குவதற்கானக் கடன் உதவி ரூ 1,50,000/- அளவில் வழங்கப்பட்டது.

மகளிர் சுய தொழில் செய்து முன்னேற சர்வம் பல்வேறு வகையான சிறு கடன் உதவிகளை வழங்கிவருகிறது. இதன் ஒரு பகுதியாக பெரம்பை மற்றும் நடுப்பாளையத்தை சார்ந்த சேமிப்புக் குழு மகளிர் 10 பேருக்கு தலா ரூ. 15,000/- வீதம் மொத்தம் ரூ.1,50,000/- அளவில் கறவை மாடு வாங்குவததற்கான கடன் உதவி சர்வம் சார்பில் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பெரம்பை ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர் கலந்து கொண்டனர்.

பெரம்பை கிராமத்தில் இயங்கிவரும் பால் சேகரிப்பு நிலையம் மேலும் சிறப்புடன் செயல்பட இக்கடன் உதவி வழிவகுக்கும் என்ற நோக்கில் இக்கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

## Aid to Noon-Meal Scheme for High School by SARVAM



பூத்துறை, ஜனவரி 12: பூத்துறை ஊராட்சியில் உள்ள உயர் நிலைப் பள்ளிக்கான சத்துணவு மையத்திற்கு சர்வம் சார்பில் ரூ. 7000/- மதிப்பிலான சமையல் பாத்திரங்கள் வழங்கப்பட்டன.

அனைத்து மாணவர்களும் அரசின் மதிய உணவுத் திட்டத்தை சிறப்பாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

No human will can finally prevail
against the Divine's Will.
Let us put ourselves
delibreately and exclusively
on the side of the Divine,
and the Victory is
ultimately certain.

- The Mother

# Cheerful Sharing moments in Women's Savings Group Members 2012...


Fancy dress competition...


Oratorical competition..


Drama...


Debate...


Singing...


Training - Medicinal Plants..


Painting...


Kolam (Rangoli)..


Culinary..


Cancer awareness..


Picnic..


Group Prayer..


Loan...


Gift for Pongal..


Receipt of saved amount...

## Editorial

### அனைவருக்கும் வணக்கம்,

சர்வம் 9 ஆம் ஆண்டிலும், கிராம புதிய உதயம் 7 ஆம் ஆண்டிலும் அடியெடுத்து வைக்கிறோம்.

ஓர் அழகிய தேரைப் பல கரங்கள் இணைந்து உலா வரச் செய்வதைப் போல, சர்வம் என்ற அமைப்பை பல உள்ளங்கள் இணைந்து வளர வைத்துக் கொண்டிருப்பதை மிகவும் நெகிழ்ச்சியுடன் நினைத்துப் பார்க்கிறோம்..

இதில் பங்கு பெற்ற சான்றோர்கள், இணைந்து பணியாற்றுபவர்கள், ஊர் பெரியோர்கள், மகளிர், இளைஞர்கள், குழந்தைகள், ஆசிரிய ஆசிரியைகள் மற்றும் அனைத்து நல் உள்ளங்களுக்கும் சர்வம் சார்பில் மனமார நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் மேலும் அனைவருடனும் இணைந்து நல்ல பல செயல்கள் செய்யப்பட வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனையும், அன்னையையும், ஸ்ரீ அரவிந்தரையும் வேண்டி வணங்குகின்றோம்.

**சர்வம்**

## Celebration to Commemorate the Beginning of Ninth Year of SARVAM


Inauguration day..


Prayer...


Greeted by Ex-President..


Greeted by Ex-Councilor


Greeted by Panchayat Secretary


Greeted by the youth


Greeted by Women's Savings Group Leaders...


Girl students' Prayer...


Boy students' Prayer...

## A Greeting Letter to SARVAM...

சர்வம் ஸ்ரீ அரபிந்தோ சொசைட்டி அவர்கள் பூத்துறை பஞ்சாயத்திற்கு வருகை புரிந்து எட்டாம் ஆண்டு முடிந்து பிப்ரவரி மாதம் 2ஆம் தேதி ஒன்பதாவது ஆண்டு தொடங்கி மீண்டும் இன்முகத்தோடு கிராமத்திற்குச் சமுக சேவையைச் சிறப்பாக செய்ய இருக்கும் சர்வம் அமைப்பினர் அவர்களுக்கு முதற்கண் எனது வணக்கத்தினையும் என்னுடைய கிராமத்தின் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாணவர்களிடம் பேச்சாற்றல், ஆளுமைத்திறன், தனிமனித ஒழுக்கம், கல்வியில் புலமை, தனித்திறன், தன்னம்பிக்கை, கலை மற்றும் அறிவியல், மனதை ஒருநிலைப்படுத்தக் கூடிய யோக ஆசனப் பயிற்சி, நல்லொழுக்கம், கணினிப் பயிற்சி, பாடல், கராத்தே, ஆன்மீகக் கதைகள், ஓவியம், கைவேலைப்பாடுகள், பரதநாட்டியம், நாடகம் மற்றும் நாட்டுபுற நடனம் போன்றவற்றை மாணவர்களுக்கும், சேமிப்பு மகளிருக்கான தனித்திறமை, பாட்டு, விளையாட்டுப் போட்டி, மாறுவேடப் போட்டி, நாடகம், பட்டி மன்றம், புற்றுநோய் விழிப்புனர்வு, வீட்டுத் தோட்டம், சமையல் குறிப்பு, கோலப் போட்டி, நீரிழிவு நோய், இன்பச் சுற்றுலா போன்ற பல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தது எங்கள் கிராமத்திற்கு ஒரு வரப்பிராதமாகும்.

மனிதனுக்கு அப்பாற்பட்டு சக்தி கடவுள் ஒன்று உள்ளது என்ற எண்ணத்தை மாணவர்களிடமும், மகளிரிடம் கற்றுக் கொடுத்தது சர்வம். சர்வத்தின் சேவை மேன்மேலும் தொடர வாழ்த்துகள்.

ரா. மண்ணாங்கட்டி, பூத்துறை

# Enjoying the Skill Games by the Women...


Stacking...


Stacking with timing...


Balancing water bottle on a pole...


Playing in pair...


Throwing the ball to hit a target


Lucky Round...


Hitting the target with a Frisbee...


Playing with fingers..


Getting the maximum prizes..


Women's Savings Group leaders of Poothurai...


Women two days workshop...


Women's Savings Group leaders of Perambai...

# Greetings on the occasion of Women's day

சேமிப்பு என்பதை சிறு அளவில் சமுதாய விழாவுக்காக மணவெளி என்ற சிறிய கிராமத்தில் 50 நபர்களுடன் ஆரம்பித்து இன்று சுமார் 700 மகளிர் பங்களிப்புடன் அழகுடன் மிளிர மிக முக்கிய காரணம் சேமிப்புக் குழுத் தலைவிகள்.

தங்களுக்காக என்று சுயநலம் பாராமல் அனைத்துப் பெண்களுக்கும் என அருமையாக செயல்படும் பூத்துறை, மணவெளி, காசிப்பாளையம், கொண்டிமேடு, பெரம்பை, வாழப்பட்டாம்பாளையம் மற்றும் நடுப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த அனைத்துக் குழுத் தலைவிகளையும் சர்வம் வாழ்த்தி.. அவர்களுக்காக மனமார பிரார்த்திக்கிறது.

குழுத்தலைவிகள் மற்றும் அதில் உள்ள ஒவ்வொரு உறுப்பினர்களும் சர்வத்தின் அங்கத்தினர் என்பதை இந்த 9 ஆம் ஆண்டு அடியெடுத்து வைக்கும் நேரத்தில் சர்வம் பெருமிதத்துடன் நினைத்து மகிழ்கிறது.

அனைவருக்கும் நன்றி!

**அனைவருக்கும் பெண்கள் தின வாழ்த்துகள்**

செய்தி சேகரித்து வடிவமைத்து வெளியிடுவோர் சர்வம் குழு Published and edited by Vijay N. Poddar on behalf of Sri Aurobindo Society, No.1,Rangapillai Street, Puducherry and Printed at Mother's Grace Printers & Graphics, Puducherry.